# அர்ச். சூசையப்பரின் பாக்கியமான மரணம்!

**( அர்ச். சூசையப்பருடைய பாக்கியமான திருமரணத்தைப் பற்றி தியானித்தல் )**

அர்ச். சூசையப்பர் அநேக வருடம் புண்ணிய வழியிலே மகா சுறுசுறுப்போடே வாழ்ந்தபின் அவருக்கு மரிக்கும் காலம் வந்தது. எல்லோரும் சாக வேண்டும் என்கிறதினாலே அர்ச்.சூசையப்பர் சாவுக்கு உட்பட்டிருந்தார். சேசுநாதரும் தேவமாதாவும் சாவுக்கு அடங்கினவர்களல்ல. ஆனாலும், சாவுக்கு உட்பட்டிருந்தார்கள். சாவைத் தவிர நிச்சயமானது ஒன்றுமில்லையே.

கிறீஸ்தவர்களே, உலகில் மனிதர் சாகிறதை யாவரும் காண்கிறோம். நாமும் சாக வேண்டுமென்பதைப் பற்றி நினையாமல் சாவை மறந்திருப்பானேன். சாவினாலே நன்மை நிறைந்த அல்லது பொல்லாப்பு நிறைந்த முடிவில்லாத காலம் வரும் என்கிறதினாலே சாகிறதற்கு ஒவ்வொருவரும் ஆயத்தம் பண்ணாமல் இருக்கலாமோ. இதனாலே அவரவர் இறந்த செய்தியை நீ அறிந்து அவரவர்க்குச் சாவு வந்தாற்போலே உனக்குக் கொஞ்ச நாளிலே சாவு வருமென்று நினைக்க வேண்டும்.

அர்ச்.சூசையப்பர் தாம் செய்த கணக்கிட முடியாத புண்ணியங்களைக் கொண்டு தமக்கு நல்ல சாவு வரப் பண்ணினார். அதெப்படியெனில், வேதனை நிறைந்த அவருடைய வாழ்க்கையிலே துன்பங்களும் கஷ்டங்களும் எப்போதுமிருந்தாலும் ஒருக்காலும் அவர் முறுமுறுக்காமலும் ஆச்சரியமான பொறுமை அவரிடத்தில் விளங்கிற்று. அவர் மிகுந்த தரித்திரராய் இருந்தாலும், அநேக வருடம் அவர் கடின வியாதியாயிருந்தாலும், அப்படிப்பட்ட கஷ்டத்தை கொஞ்சமாகிலும் மாற்றத்தக்கதாகத் தமதருகில் இருந்த சேசுநாதரை ஒருநாளும் கேட்கவில்லை. இவ்வாறு அவர் தமக்கு நல்ல மரணம் கிடைப்பதற்கு தம்மை தயாரித்துக் கொண்டார். இதுபோலவே நீயும் நன்மரணம் அடைவதற்கு, நன்றாயிருக்கும்போதே அநேக புண்ணியங்களைச் செய்ய வேண்டும். மரண நேரத்திலே விசேஷமாய்த் தேவ நம்பிக்கையும் பொறுமையும் தேவைப்படுவதினாலே உனக்கு இப்போது வருகிற வியாதி முதலான வெவ்வேறு துன்பங்களிலே தேவ நம்பிக்கையுடனும் பொறுமையுடனுமிருக்கப் பழக வேண்டும்.

அன்றியும் அர்ச்.சூசையப்பர் அவஸ்தையாயிருக்கிற போது மிகுந்த வேதனை அனுபவித்தாலும் தமதருகில் சேசுநாதரும் தேவமாதாவும் இருக்கிறதைக் காண்கிறபோது எவ்வளவு ஞான சந்தோஷத்தை அடைந்தாரென்று வார்த்தையினால் சொல்ல முடியாது. சேசுநாதரும் தேவமாதாவும் மகா அன்போடு அச்சமயத்திலே தாம் படுத்திருக்கிற கட்டிலருகில் இருந்து தமக்கு பணிவிடை செய்கிறதை அவர் கண்டு அனுபவித்த சந்தோஷத்தை வரையறுத்துக் கூற இயலாது. சேசுநாதரும் தேவமாதாவும் தமக்கு அந்தச் சமயத்திலே உணவு கொடுக்கிறதையும், சில நேரங்களில் அவர்கள் தங்கள் கைகளினாலே தமது தலையைத் தாங்கி தம்மைத் தூக்குகிறதையும், படுக்க வைக்கிறதையும், தமது நெற்றியில் வடியும் வேர்வையைத் துடைக்கிறதையும், தமக்கு ஆறுதலாகச் சந்தோஷமான வார்த்தைகளைச் சொல்லுகிறதையும் அவஸ்தையாயிருந்த அர்ச்.சூசையப்பர் கண்டு இப்படிப்பட்ட மகிமைகளை அடைய நான் பாத்திரவானல்ல என்று மகா தாழ்ச்சியோடே நினைத்தார். அவருடைய ஆத்துமம் பிரிகிறதற்கு சற்று நேரத்திற்கு முன்பு அர்ச். சூசையப்பர் சேசுநாதரையும் தேவமாதாவையும் பார்த்து: ‘நான் உங்களுக்கு ஏற்ற ஊழியம் பண்ணாமலிருந்ததை நீங்கள் பொறுக்க வேண்டும்’ என்று சொல்லித் தமது ஆத்துமத்தை அவர்களுடைய திருக்கையிலே ஒப்புக்கொடுத்து மரணமடைந்தார்.

சேசுநாதரும் தேவமாதாவும் அவஸ்தையாயிருந்த அர்ச்.சூசையப்பருக்கு மகா அன்போடே ஊழியம் பண்ணின செய்தியை நீங்கள் அறிந்து அவஸ்தையாயிருக்கிறவர்களுக்கு நீங்களும் அப்படி ஊழியம் பண்ணினால் மிகவும் நல்லது. அர்ச். சூசையப்பர் உயிரோடிருக்கும்போது சேசுநாதருக்கும் தேவமாதாவுக்கும் ஊழியம் பண்ணி வாழ்ந்ததினாலே அவர்களிடமாய் மரணத்தை அடைந்தார். ஆகையால் நீங்களும் நன்றாயிருக்கும்போது சேசுநாதருக்கும் தேவமாதாவுக்கும் நன்றாய் ஊழியம் பண்ணினால் நல்ல மரணத்தை அடைவீர்கள். மேலும் நீங்கள் அறிய வேண்டியதாவது: இப்போது சொன்னபடியே அர்ச்.சூசையப்பர் எல்லாவற்றையும் பார்க்கப் பாக்கியமுள்ள மரணத்தை அடைந்ததினாலே, நல்ல மரணத்தைக் கொடுக்கிற வரமுடையவர் அர்ச்.சூசையப்பர்தானே என்று விசுவசிக்கிறதுமல்லாமல் உங்களுக்கு நல்ல

மரணம் வரத்தக்கதாக அவர் பேரிலே பக்தி வைத்து அடிக்கடி அந்த மன்றாட்டை அவரிடம் கேட்க வேண்டும்.

**நன்மரணத்திற்குப் பாதுகாவலரான அர்ச்.சூசையப்பரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.**